


திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, சின்னக்காம்பாளையம் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் எஸ். வி.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் ரா.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.



தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு 01.07.2026 அன்று தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளரும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ராஜா ஆகியோர் தென்காசி மாவட்டம் மேலகரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த மருத்துவர்களுக்கு இனிப்புகள் வழங்கி,பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். உடன் மேலகரம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜீவானந்தம், வழக்கறிஞர் வேலுச்சாமிபாண்டியன், சுரேஷ்,குத்தாலிங்கம்,கபிலன், பொருளாளர் ரமேஷ்,பாண்டி, மீனாட்சி,மாரியப்பன், தகவல் தொழில்நுட்ப அணி விக்னேஷ் மற்றும் கழகத்தினர் இருந்தனர்.

# செஞ்சியில் சந்தனக்கூடு விழா - பொது விருந்து!

## செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஜுலை 3-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிமந்தவெளியில் உள்ள ஹசரத் சையத் யூசுப் ஷா அவுலியா தர்காவில் சந்தனக்கூடு விழாநேற்று முன்தினம் இரவு விமர்சையாக நடைபெற்றது இதை முன்னிட்டு கடந்த 26ஆம் தேதிசெஞ்சி சந்தை தோப்பில் உள்ள ஹசரத் சையத் இஸ்மாயில் ஷா அவுலியா தர்காவிலும்,ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்காவிலும்பிறைக்குடி ஏற்றப்பட்டு பாத்திஹா ஓதப்பட்டது.

தொடர்ந்து கடந்த 29ஆம் தேதி இரவு 7.00 மணி அளவில்மந்தவெளியில் உள்ள ஹசரத் சையத் யூசூப் ஷா அவுலியா தர்காவில் சந்தனகூடு விழாவை முன்னிட்டு சிறப்பு பாத்திஹா ஓதும்நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் பாத்திஹா ஓதும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற பொது விருந்தில் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அனைவருக்கும் அறுசுவைஉணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், முன்னாள் நகர செயலாளர் காஜா நஜிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து இரவு 10 மணிக்கு

சந்தனக்கூடு உற்சவம் நடைபெற்றது.சந்தனக்கூடு ஊர்வலம் புறப்பட்டு செஞ்சி செட்டிபாளையம் சம்பாபூரில்அமைந்திருக்கும் ஹசரத் சையத் காஜா பதவல்லாஷா அவுலியாதர்காவை சென்றடைந்து சந்தனம் ஏற்றி பாத்திஹா ஓதிய பிறகு அங்கிருந்து புறப்பட்டு வழிநெடுக்கிலும் முஸ்லிம் இளைஞர்கள் சங்கம் சார்பில் சிலம்பாட்டம் மற்றும் பல வீர விளையாட்டுடன் 30 ஆம் தேதி காலை 6மணியளவில் செஞ்சி ஹஸ்ரத் சையத் யூசூப் ஷாஅவுலியா தர்காவை வந்தடைந்துசந்தனம் ஏற்றி பாத்திஹாஓதப்பட்டது.

தொடந்து அன்று மாலை 6 மணிக்கு செஞ்சி கோட்டையில் இருக்கும் ஹசரத் சையத் தாதா பீர் அவுலியா தர்காவில் சந்தனம் ஏற்றியும்,செஞ்சிக்கோட்டை சக்கர குளம் வழியில் இருக்கும் ஹசரத் சையத்நிஜாமூதீன் அவுலியா தர்காவில் சந்தனம் ஏற்றியும் பாத்திஹாஓதப்படும்

சந்தனக்கூடு விழா விற்கான ஏற்பாடுகளை ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்கா கமிட்டி நிர்வாகிகள்கௌரவ தலைவர் ஜான் பாஷா, தலைவர் அசாதுல்லா, செயலாளர் சர்தார், பொருளாளர் ஷமியுள்ளா, துணைத் தலைவர் முபாரக், துணைச் செயலாளர்கள் ஷாஜகான் ஷரீப், ஹாஜி ஷரீப்உள்ளிட்டோர் செய்தனர்.

### கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை பகுதிகளில் அணுக்கனிம சுரங்கம் அமைக்க காலக்கெடுவை நீட்டித்து த.வெ.க. அரசு அனுமதி!

# அமைச்சர் ராஜேஷ்குமார் கடந்த ஆட்சியில் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இப்போது எதிர்ப்பு தெரிவிக்காதது ஏன் ?

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கேள்வி!



கன்னியாகுமரி, ஜுலை 3-

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் செயல்படும் ஒன்றிய அரசுக்குச் சொந்தமான இந்திய அருமணல் ஆலைக்கு (Indian Rare Earths Limited) தேவையான அணுக்கனிம மூலப்பொருட்களை (மோனோசைட், இலுமனைட், சிலிமனைட் போன்ற அணுசக்தி தாதுக்கள்) வழங்கும் நோக்குடன் கிள்ளியூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கீழ்மிடாலம், மிடாலம், இனையம், புத்தன்துறை, ஏழுதேசம், கொல்லங்கோடு வரை உள்ளிட்ட கடற்கரை கிராமங்களில் சுமார் 1800 ஹெக்டேர் பரப்பளவில் அணுக்கனிம சுரங்கம் அமைக்க 2015ம் ஆண்டில் மத்திய அரசு முடிவு செய்தது. இது தொடர்பான அணுசக்தித் துறையின் கோரிக்கையை ஆய்வு செய்த அப்போதைய அ.தி.மு.க அரசு 1144 ஹெக்டேர் நிலத்தில் அணுக்கனிம சுரங்கம் அமைக்க 2020ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தது.

அதைத் தொடர்ந்து அந்த நிலங்களை அணுக்கனிமச் சுரங்கம் அமைக்க ஒதுக்கீடு செய்து 11.06.2021ல் ஒன்றிய அரசு ஆணை பிறப்பித்தது. அதன் தொடர் நடவடிக்கையாக அங்கு அணுக்கனிம சுரங்கம் அமைப்பதற்கான பொதுமக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் 2024ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. கழகத் தலைவர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கடந்த கால ஆட்சியில் பொதுமக்களின் நலன் கருதி கருத்து கேட்புக் கூட்டம் நடத்தாமல், தமிழ்நாடு அரசின் சார்பில் அணுக்கனிம சுரங்கம் அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்காமல் இருந்தது. அப்போது கூட்டணி யில் இருந்த காங்கிரஸ் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ராஜேஷ் குமார் பொதுமக்களுக்கு ஆதரவாக இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரி வித்து வந்தார். ஆனால் தற்போது த.வெ.க. அரசுடன் கூட்டணியில் இருக்கும். சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் அவர்கள் பொதுமக்களுக்கு கேடு விளைவிக்கும் இத்திட்டத்திற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்காததை குறித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அணுக்கனிம சுரங்கம் அமைக்க 1144 ஹெக்டேர் நிலங்களை ஒதுக்கி 11.06.2021ம் நாள் ஒன்றிய அரசு பிறப்பித்த ஆணை ஐந்தாண்டுகளுக்கு மட்டும் தான் என்பதால், இந்த திட்டம் காலாவதியாகி விட்டதாக அனைவரும் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் நில ஒதுக்கீட்டை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து கடந்த 10.06.2026ம் நாள் தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்திருப்பது வேதனை அளிக்கிறது. ஏற்கனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோய் தாக்கம் அதிகமாக உள்ள நிலையில், மணவாளக்குறிச்சி பகுதியில் இயங்கும் இந்திய அருமணல் ஆலையால் ஏற்படும் கதிர்வீச்சு காரணமாக ஏற்கனவே சுற்றுப்புற கிராம மக்கள் புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு, தோல் நோய், ஆஸ்துமா, கருச்சிதைவு உள்ளிட்ட பாதிப்புகளை தொடர்ந்து சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் அணுக்கனிம சுரங்கம் அமைக்கப்பட்டால், அதில் ஏற்படும் கதிர் வீச்சின் காரணமாக மாவட்டத்தில் புற்றுநோய் பாதிப்புகள் மேலும் அதிகரிக்கும். மத்திய அரசின் இது போன்ற கொடிய திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு துணை போவது கன்னியாகுமரி மாவட்ட மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. எனவே, பொது மக்களுக்கு பேராபத்தை விளைவிக்கும் கிள்ளியூரில் அணுக்கனிம சுரங்கம் அமைக்க 1144 ஹெக்டேர் நிலம் ஒதுக்கிய அரசாணையின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் ஓராண்டு நீட்டித்து பிறப்பிக்க ப்பட்டுள்ள அரசாணையை தமிழ்நாடு அரசு உடனே ரத்து செய்து இத்திட்டத்தை கைவிட வேண்டும் இல்லையென்றால் பொது மக்கள் சார்பில் கடற்கரை கிராம மக்களை ஒன்றிணைத்து மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கம் செய்யக்கோரி

# அரியலூர் மாவட்ட மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர். சுபா.சந்திரசேகர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர். எஸ்.ஆர்.இராமராஜன் பங்கேற்பு!

அரியலூர், ஜுலை 3-

அரியலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாசிலை அருகில் பொது இடத்தில் போதை பொருள் பயன்படுத்திய தவெக அரசின் நிர்வாக திறனற்ற, சோபா மாடல் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படியும், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின் படி கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்டத் துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகர், லதா பாலு,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் செல்வ. பிரபாகரன், ஆர். ரமேஷ், எஸ். சுரேஷ், ஆர். வெங்கட்ராமன், மு. தமிழழகி, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ. அறி வழகன், மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், அசோக சக்கரவர்த்தி, வி.எழில்மாறன், தனவேல், இரா.அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா, ஆர். செந்தில்குமார், ஏ.ஜி.எஸ். முருகன், நகர செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி ராஜேந்திரன்,

மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் வின்சென்ட் ராஜா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், சுபா.ச. வசந்த பகலவன் தர்மராஜ் வீர சிவா, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் இராணி, நகர கழக நிர்வாகிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், குணா, உத்திராபதி, முத்தமிழ், ஆசை. அன்பழகன், மற்றும் கழக நிர்வாகிகள் குப்புசாமி, ஆனந்த், இரவிச்சந்திரன், முத்து, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# 2026 ஜுன் மாதத்தில் 96.75 லட்சம் பயணிகள் பயணம்!

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தகவல்!

சென்னை, ஜுலை 3-

2026 ஜுன் மாதத்தில் 96.75 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL) தகவல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் CMRL வெளியிட்டுள்ள அறிக்கையில்;

“சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில்பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் 96,75,993 பயணிகள் மெட்ரோஇரயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக 24.06.2026 அன்று 3,77,208 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். 2026, ஜுன் மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 48,83,485 பயணிகள், க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி(Single Journey Paper QR 19,28,372; Online QR-1,27,795; Static QR 2,03,398; Whatsapp 4,29,255; Paytm 2,90,492; ONDC-12,13,854; PhonePe- 2,63,433; CMRL Mobile App(SVP) 80,224; Chennai One App - 2,46,608; Vijay Antony Music Concert Event QR-9,077) பயணிகளும் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், Digital SVP, க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு, Whatsapp (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்றபயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20% கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது. மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களில் வாங்கப்படும் ஒற்றைப்பயணத்துக்கான காகித QR பயணச்சீட்டுகளுக்கு (Single Journey Paper QR tickets) இந்தத் தள்ளுபடிகிடையாது.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்புநல்கி வரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாயப்பட்டறைகள் மூடப்பட்டதன் எதிரொலி :

# விசைத்தறி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்!

சங்கரன்கோவில், ஜுலை 3-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருக்கும் சாயப்பட்டறைகள் செயல்படாததால், விசைத்தறி தொழிலுக்கு தேவையான நூல் கிடைக்காமல் விசைத்தறி கூடங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ளன.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான விசைத்தறி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். கடந்த சிலநாட்களுக்கு முன் சுற்றுசூழல் துறை அமைச்சரின் ஆய்வை தொடர்ந்து, உரிய அனுமதி இல்லாமல் இயங்கி வந்த சில சாய பட்டறைகள் மூடப்பட்டன.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மேற்கொண்ட நேரடி ஆய்வுக்குப் பிறகு, உரிய அரசு அனுமதி (CTE/CTO) இன்றி கழிவுநீரை வடிக்கால்களில் கலந்து வந்த 22 ஆலைகளுக்கு சீல் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில், கழிவு நீர் சுத்திகரிப்பு பிரச்சினை காரணமாக தொழில் முடக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சங்கரன்கோவில், டி.என்.புதுக்குடி, புளியங்குடி மற்றும் சிந்தாமணி ஆகிய சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட விசைத்தறி களும், 10,000க்கும் அதிகமான நெசவுத் தொழிலாளர்களும் நேரடியாகப் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

இதனை அடுத்து சாயப் பட்டறை கழிவுகளை சுத்திகரிக்கும் நிலையத்தை அரசு அமைத்து தர வேண்டும் என விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் விசைத்தறி கூடங்களின் உரிமையாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை தெற்கு ஒன்றியதிற்குட்பட்ட கவிநாடு மேற்கு, 9a நத்தம் பண்ணை, ஆகிய ஊராட்சிப் பகுதியில் வாக்காளப் பெருமக்களை இல்லம் தோறும் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாசிலை அருகில் பொது மக்கள் கூடும் இடத்தில் போதை பொருள் பயன்படுத்திய தவெக அரசின் நிர்வாக திறனற்ற, சோபா மாடல் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க,கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படியும், எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின் படி கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், எஸ்.ஆர்.இராமராஜன் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, இராஜேந்திரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், கழக தொழர்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.